(எ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இச் சட்டமுன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(ஏ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(ஐ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை (திருத்த) சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை (திருத்த) சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன்.